

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் டி.சிவசுப்பிரமணியன் அவர்களின் தாயார் திருமதி.கோமதி அம்மாள் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் உயிரிழந்தது அறிந்து சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அவருடைய இல்லத்துக்குச் சென்று, சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட அவர்களது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. உள்ளார்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சீவல்சரகு கிராமத்தில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடம் கட்டுமானப் பணிகளை நேற்று முன்தினம் (09.10.2024) ஆய்வு மேற்கொண்டனர். அருகில் அரசு கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, அரசு செயலர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) மரு.ஆர்.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, முதன்மை தலைமைப் பொறியாளர்(மதுரை மண்டலம்) செல்வராஜ், கண்காணிப்புப் பொறியாளர் (மதுரை மண்டலம்) அய்யாக்கண்ணு, செயற்பொறியாளர் தங்கவேல் உட்பட பலர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார்!

# சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட முதல் பெண் போராளி குயிலி சிலை திறப்பு!

## அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் சிலைக்கு மரியாதை!

சிவகங்கை, அக். 11-

சிவகங்கையை தலைநகராக ஆட்சிபுரிந்த அரசி ராணி வீரமங்கை வேலுநாச்சியார். இவர் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக தமிழகத்தில் இருந்து முதலாவதாக குரல் கொடுத்த பெண்அரசி ஆவார். இவரது படைத்தளபதியில் இருந்த குயிலி ஆங்கிலேயரை எதிர்த்து ஆங்கிலேயர்களின் நவீன ஆயுதக்கிடங்கில் உடல் முழுவதும் தீப்பற்றி ஆயுதக்கிடங்கினைள அழித்தார். தன்உயிரையும் மாய்த்துக் கொண்டார். இந்தியாவில் இவர் முதல் பெண் போராளி என்று பாராட்டப்பட்டார். அத்தகைய பெண் போராளி குயிலுக்கு சிலை அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. அதை ஏற்று சென்ற ஆண்டுஜனவரியில் சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழக முதல்வர் அவர்கள் சுதந்திர போராட்ட பெண் போராளி குயிலிக்கு ரூபாய் 50 லட்சம்மதிப்பில்வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார். அதனை ஒட்டி சிவகங்கை காளையார்கோவில் சாலையில் உள்ள வேலுநாச்சியார் நினைவு மண்டபத்தில் குயிலியின் சிலை அமைக்கப்பட்டு வந்தது. அத்தகைய சிலை நேற்று முன்தினம் 9ம் தேதி முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கையில் ராணி வேலுநாச்சியார் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள குயிலியின் சிலைக்கு முதலாவதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதை தொடர்ந்து எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷி அஜித் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த், பேரூராட்சி. மன்றத் தலைவர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் காளையார் கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.கென்னடி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது உட்பட அரசு அதிகாரிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாட்டில்

# 3 மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, அக். 11 -

தமிழ்நாட்டில் 3 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தருமபுரியில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. மேலும், 16 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருப்பூர், கோவை, விழுப்புரம், கடலூர், மதுரை, திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், நீலகிரி, பெரம்பலூர், ஈரோடு, புதுச்சேரி, காரைக்காலில் இன்று கன மழை பெய்யக்கூடும்.




# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!




## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அளவில் நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

**13-10-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, இந்திரகுமார் தேரடி | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி | டி.கே.பி. திருமண மண்டபம், திண்டிவனம்-மரக்காணம் சாலை, திண்டிவனம், விழுப்புரம்-1. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மருத்துவர் ஷஃபி சுலைமான், தமிழ் காமராசன் | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை | கே.பி.ஜெ.மஹால், திமிரி, மருதம்பாடி, இராணிப்பேட்டை-21. | முனைவர் சபாபதி மோகன், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, மருத்துவர் ஹபீஸ் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, டான் அசோக் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி | தளபதி அரங்கம், கலைஞர் அறிவாலயம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், திருப்பூர்-4. | கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அமுதரசன் | கே.இ.பிரகாஷ், எம்.பி. |
| 6 | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் | பிலோமினா ஷாப்பிங் மால், வினோதகன் மருத்துவமனை எதிரில், அருளானந்தா நகர், மேற்கு விரிவாக்கம், தஞ்சாவூர்-7 | திண்டுக்கல் லியோனி, மருத்துவர் யாழினி, பொள்ளாச்சி சித்திக் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர், ஊமச்சிக்குளம்-கடச்சனேந்தல் சாலை, மதுரை. | நாஞ்சில் சம்பத், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வே.மதிமாறன் | ஜி.பி.ராஜா |
| 8 | இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, | சுப்புலட்சுமி திருமண மண்டபம், பேருந்து நிலையம் அருகில், நாங்குநேரி, திருநெல்வேலி. | பொன்.முத்துராமலிங்கம், செந்தில்வேல், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | இன்பா ஏ.என்.ரகு |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● மண்டல அளவிலான பேச்சுப்போட்டிகள் காலை 9 மணிக்கே தொடங்கும். எனவே முதல் நாளே நடுவர்களும் பங்கேற்பாளர்களும் போட்டி நடைபெறும் பகுதிக்கு வந்துவிடவேண்டும். ● பங்கேற்பாளர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்து வரலாம். அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ● போட்டி நடைபெறும் அன்று, காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ● பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் மூன்று தலைப்புகளைத் தங்கள் விருப்பத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

மூன்று விருப்பத் தலைப்புகளில் நடுவர்கள் தரும் ஒரு தலைப்பில் போட்டியாளர்கள் பேச வேண்டும்.

● பேசுவதற்கான நேரம் ஐந்து நிமிடங்கள். மூன்று நிமிடங்களில் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாம் எச்சரிக்கை மணி ஒலித்ததும் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 08–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி